**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.121/2008**

**தேதி : 07.11.2025**

**(வா.சா.1 ) – திருமதி. நிர்மலாதேவி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 23 மற்றும் 24 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (23 மற்றும் 24 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. 4 முதல் 8 பிரதிவாதிகள் என் தகப்பனாரின் மக்கள் என்றால் என் அப்பாவின் இரண்டாவது தாரத்தின் மக்கள். தம்பட்டி என்ற நாராயணன், குஞ்சுமணி, அவருடைய மனைவி நாராயணியம்மாள் ஆகியோர் சேர்ந்து 08.10.1946ல் ஒரு அறக்கட்டளை ஏற்படுத்துவதற்காக செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டதாகச் சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தம்பட்டி என்ற நாராயணன் மற்றும் குஞ்சுமணி மற்றும் என் தாயார் மூவரும் சேர்ந்து டிரஸ்ட் நிர்வாகத்தைப் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அறக்கட்டளை உருவாக்கமலேயே மேற்படி தம்பட்டி என்ற நாராயணன் 1948ல் இறக்கும் வரை மேற்படி சொத்துக்களை அவர்தான் நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

2. தம்பட்டி என்ற நாராயணனுக்கு என் தகப்பனார் குஞ்சுமணி உதவியாகவும், ஆதரவாகவும் இருந்து நிர்வாகம் செய்துவந்தார் என்று சொன்னால் சரிதான். 1948ல் என் தாத்தா இறந்தபின்னர் என் தகப்பனார் குஞ்சுமணிதான் சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல, என் தாயாரும் சேர்ந்துதான் அதனை நடத்தி வந்தார். என் தாயார் திருமணம் ஆன நாளில் இருந்து அவர் இறக்கும் வரை கேரளா மாநிலம், பட்டஞ்சேரியில்தான் இருந்தார் என்றும், அவர் எப்போதும் டிரஸ்ட் நிர்வாகத்தைப் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் என் தாயாருடன் பட்டஞ்சேரியில் குடியிருந்தோம் என்றால் நாங்கள் பட்டஞ்சேரியிலும் இருந்தோம், பழனியிலும் இருந்தோம்.

3. என் தாயார் 1963ல் இறந்தார். என் தாயாரின் இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்தோமா என்றால் எனக்கு தெரியவில்லை. என் தாயார் என் தகப்பனாருடன் எந்தக்காலத்திலும் சேர்ந்து வழக்குச் சொத்தை நிர்வாகம் பார்க்கவில்லை என்றால்

சரியல்ல. 1946ம் வருட செட்டில்மெண்ட் பத்திரப்படி என் தாயாரோ, வாதிகளான நாங்களோ, 1 முதல் 3 பிரதிவாதிகளோ டிரஸ்ட்டை நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் டிரஸ்ட்டை நடத்தி வந்தோம். தற்போதுதான் டிரஸ்ட்டை நடத்த விடுவதில்லை. என் தாயார் இறந்த பிறகு செட்டில்மெண்ட் பத்திரத்தை அமல்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என் தகப்பனார் அதனைப் பார்த்துக்கொண்டார்.

4. என்னுடைய தாயார் நாராயணியம்மாள் எந்தக்காலத்திலும் சொத்துக்களை அடையவில்லை என்றும், நாங்களும் சொத்துக்களை அடையவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளான நாங்கள் அனைவரும் தற்போதும் கேரளாவில்தான் வசித்து வருகிறோம் என்றால் என் தங்கை நளினி மட்டும் பழனியில் இருக்கிறார். மற்றவர்கள் கேரளாவில் இருக்கிறோம். என் தங்கை 20 வருடமாக பழனியில் இருக்கிறார். அதற்கு ஆதார் அட்டை உள்ளதா என்றால் உள்ளது. நானும், என் சகோதரிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் என் தகப்பனாருடன் சேர்ந்து மடத்தின் நிர்வாகத்தைப் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் இறந்தபின்பு என் தகப்பனார்தான் மேற்படி நிர்வாகத்தைப் பார்த்தார் என்றால் என் தகப்பனாரும் பார்த்தார், என் தம்பிகளும் பார்த்தார்கள்.

5. என் தகப்பனார் 1955ல் என் தாயார் இறந்தபிறகு லீலாவதி என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டார் என்று சொன்னால் அப்படித்தான் கேள்விப்பட்டோம். நான் பழனி பக்கமே வந்தது இல்லை என்றும், அதனால்தான் என் தகப்பனார் இரண்டாவது திருமணம் செய்த விபரமே தெரியவில்லை என்றும் சொன்னால் நான் பாலக்காட்டில் இருந்தேன், அதனால் மேற்படி விபரம் தெரியவில்லை. என் தகப்பனாருக்கும், லீலாவதிக்கும் பிறந்தவர்கள்தான் 4 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் தகப்பனாரும், லீலாவதியும் சேர்ந்துதான் பழனியில் வழக்குச் சொத்தை நிர்வாகம் செய்து வந்ததாகச் சொன்னால் அவர்கள் ஊரிலும் இருந்தார்கள், இங்கும் இருந்தார்கள். 4 முதல் 8 பிரதிவாதிகள் என் தகப்பனாருடனும், லீலாவதியுடனும்தான் மடத்தில் இருந்தார்கள் என்றால் ஊரில் இருந்த நிலங்களை விற்றுவிட்டு வந்து அவர்கள் இங்கேயே இருந்தார்கள்.

6. என் தகப்பனார் குஞ்சுமணி 2005ல் இறந்தார். அவர் இறந்த தேதி 13.02.2005 என்றால் சரிதான். அவர் இறக்கும் வரை வாதிகளுக்கும், 1 முதல் 3

பிரதிவாதிகளுக்கும் தெரிய என் தகப்பனார் அவருடைய சொந்த சொத்துக்களாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில்தான் சொத்துவரி, வீட்டுவரி, மின் கட்டண ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குஞ்சுமணி வழக்குச் சொத்துக்களை 60 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவித்து வந்ததால் மேற்படி சொத்துக்கள் அவருக்கே பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தாவாச்சொத்துக்களைப் பொறுத்து எவ்வித அனுபவமோ, பாத்தியமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7. வழக்குச்சொத்தான மடம் பலவீனமாக இருந்ததால் என் தகப்பனார் குஞ்சுமணி லட்சக்கணக்கில் செலவு செய்து சீர்படுத்தினார் என்றால் சரியல்ல, அவர் சில கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டு மடத்திற்கு கெடுதல் செய்துள்ளார். மடத்தை பராமரிப்பதற்காகத்தான் தாவா 2ம் இலக்கச்சொத்தை வாடகைக்கும், ஒத்திக்கும் விட்டு அந்தத் தொகையைக் கொண்டு பராமரிக்கப்பட்டது என்றும், அதை ஆட்சேபிக்க எங்களுக்கு உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மராமத்து, பராமரிப்புச் செலவுகளுக்காக என் தகப்பனார் 9ம் பிரதிவாதியிடமும் மற்றும் பலரிடமும் கடன் பெற்றுள்ளார் என்றால் எங்களுக்குத் தெரியாது. 7ம் பிரதிவாதி சைலஜாவின் திருமணச் செலவிற்காக என் தகப்பனார் கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

8. என் தகப்பனார் அவருடைய மனைவி லீலாவதியின் மருத்துவச் செலவிற்காக 9ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றிருந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை. அவ்வாறு கடன் வாங்கி, அதை திருப்பிச் செலுத்த இயலாதநிலையில் 9ம் பிரதிவாதிக்கு தாவா 2ம் லக்கச் சொத்தை என்தகப்பனார் 18.06.1999ம் தேதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அவ்வாறு கிரையம் செய்து கொடுத்தது தவறு என்றதான் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம். 9ம் பிரதிவாதி புனிதவதிக்கு கொடுத்த கடன் போக மீதித்தொகையைக் கொண்டுதான் என் தகப்பனார் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டார் என்றால், அவை தவறு என்பதால்தான் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். என் தகப்பனார் கடைகள் கட்டிய விபரம் எங்களுக்குத் தெரியுமா என்றால் அவை பற்றி எங்களுக்கு தெரிந்திருக்கவில்லை. என் தகப்பனார் இறந்த சமயம்தான் நாங்கள் இங்கு வந்த பார்த்து தெரிந்துகொண்டோம்.

9. என் தகப்பனார் 9ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. 1ம் இலக்கச் சொத்தை மராமத்து செய்வதற்கும், பராமரிப்பதற்காகவும்தான் கிரையம் கொடுக்கப்பட்டது என்பதால் அந்த கிரைய ஆவணம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகளான நாங்கள் 5 பேரும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் சேர்ந்து என் தகப்பனாரிடம் மடத்தை விற்று பணம் கொடுக்குமாறு கேட்டதாகச் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் அவ்வாறு கொடுக்க மறுத்ததால் பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.66/1997 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல, புனிதவதிக்கு விற்கப்போவதாகக் கேள்விப்பட்டு அந்த வழக்கைத் தாக்கல் செய்தோம். வாதிகளான நாங்களும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் வழக்குச் சொத்துக்கே வரவில்லை என்றும், அனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் என் தகப்பனார் இருந்த காலத்தில் ஒரு வருடத்திற்கு இரண்டு மாதங்கள் இங்குதான் இருந்தோம்.

10. 1 முதல் 3 பிரதிவாதிகளின் திருமணத்தின்போது அவர்களுக்கு என்னுடைய தகப்பனார் ஒவ்வொருவருக்கும் தலா 7 சவரண் நகை கொடுத்தாரா என்றால் இல்லை. கேரளாவில் பட்டஞ்சேரில் உள்ள பூர்வீகச் சொத்துக்களை என் தம்பிகளுக்கு என் தகப்பனார் அவருடைய தந்தையார் மூலம் எழுதிவைத்தார் என்றால், என் தாத்தாதான் எழுதிவைத்தார். அதற்கு என் தகப்பனார்தான் காரணம் என்றால் சரியல்ல, என் தகப்பனார் எங்களை கவனிக்கவில்லை. இந்த வழக்கில் சொத்தை எங்களுக்கு கொடுக்கும்படி கேட்டுள்ள சுவாதீன பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 4 முதல் 8 பிரதிவாதிகள் என் தகப்பனாரின் வாரிசுகள் என்பதை மறைத்து வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால், அவர்கள் என் தகப்பனாரின் வாரிசுகள் என்ற விபரம் எங்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

11. நாங்கள் கோரியுள்ள சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களை 4 முதல் 8 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், அவர்களுக்குப் பிறகு 23 முதல் 27 பிரதிவாதிகளின் பராமரிப்பில்தான் வழக்குச் சொத்துக்கள் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல, அது பூட்டி வைக்கப்பட்டுள்ளது. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரமும், சுவாதீன பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், வழக்கு

நிலைநிற்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. திருமணத்திற்குப்பிறகு கேரளாவிலேயே நாங்கள் இருந்து வருவதால் எங்களுக்கு நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 23 முதல் 27 பிரதிவாதிகள் வழக்குச் சொத்துக்களை நல்லமுறையில் பார்த்து வருகிறார்கள் என்றும், அவர்களுக்குத்தான் வழக்குச் சொத்தில் உரிமை உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

12. நாங்கள் சென்ற தீபாவளி சமயம் மடத்திற்குச் சென்று அங்கு இருந்தவர்களை மிரட்டியதாகச் சொன்னால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. காவல் துறையினர் தலையிட்டு அவர்களை வெளியேற்றியதாகச் சொன்னால் நாங்கள் அந்தச் சமயம் இங்கு வரவேயில்லை. வழக்குச் சொத்து பழனி அடிவாரத்தில் முக்கியமான இடத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களின் மதிப்பு இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் மதிப்பு பெறும் என்றும், அதனால் இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும் சொன்னால் அதன் மதிப்பு பற்றி எனக்கு தெரியாது. சரியான மதிப்பு காட்டி, சரியான நீதிமன்றக் கட்டணம் செலுத்தாததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(25 மற்றும் 26 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை தக்கவைத்துக் கொள்ளப்பட்டது)**

**மறு விசாரணை :-** இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.11.07 19:40:59 +0530

Additional Sub Judge,
Palani.